# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 8

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 18 ஆ) 30 இ) 247 ஈ) 216

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

தேன்தமிழ் குறிப்பது தமிழின்

அ) இனிமையை ஆ) பழமையை

இ) செம்மையை ஈ) இளமையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பன எக்கழக நூல்கள்?

அ) முதற்கழக ஆ) கடைக்கழக

இ) இடைக்கழக ஈ) முக்கழக

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) வெள்ளிவிழா ஆ) பவளவிழா

இ) பொன்விழா ஈ) வைரவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

கண்ணன் முத்தமிழ் விழாவில் கவிதை வாசித்தான். இங்கு இடம்பெற்றுள்ள செயப்படுபொருள்

அ) கண்ணன் ஆ) முத்தமிழ்

இ) கவிதை ஈ) வாசித்தான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

நாதகுத்தனார் எழுதிய காப்பிய நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) குண்டலகேசி

இ) வளையாபதி ஈ) மணிமேகலை

சென்றான் என்ற சொல்லின் வினையடி

அ) சென்று    ஆ) செல்    இ) சென்ற    ஈ) சென்றான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய இறுதித் தமிழ்மன்னன்

அ) கயிலைவன்னியன்    ஆ) எல்லாளன்

இ) சங்கிலியன்    ஈ) பண்டாரவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

**குறள் :-** நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்

____________ யாளர் தொடர்பு

அ) மாண்புடை    ஆ) வன்புடை    இ) பண்புடை    ஈ) அன்புடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

அதியமான் நெல்லிமரத்தைக் கண்டான். இதில் இரண்டாம் வேற்றுமை ஏற்ற

சொல்

அ) கண்டான்    ஆ) மரத்தை    இ) நெல்லி    ஈ) அதியமான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

'காட்டுமல்லிகை' என்ற பாடலைப்பாடியவர்

அ) மகாகவி உருத்திர மூர்த்தி    ஆ) பாவேந்தர்

இ) காளமேகப் புலவர்    ஈ) காசிஆனந்தன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

அஃறிணைக்குரிய பால்கள்

அ) மூன்று    ஆ) ஐந்து    இ) இரண்டு    ஈ) நான்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

தொண்டமானிடம் தூதாகச் சென்ற புலவர்

அ) அதியமான்    ஆ) சேரமான்    இ) பாரி    ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

வரதன் என்ற இயற்பெயருக்கு உரியவர்

அ) காளமேகம்    ஆ) இளங்கோ அடிகள்

இ) தனிநாயகம் அடிகள்    ஈ) விபுலாநந்த அடிகள்

பண்டாரவன்னியனுக்குக் கல்வெட்டு நாட்டப்பட்ட இடம்

அ) உடையாவூர் ஆ) கற்சிலைமடு
இ) முள்ளியவளை ஈ) பண்டாரிக்குளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

வாய்மை என்ற சொல்லின் பொருள்

அ) பொய்மை ஆ) அண்மை இ) உண்மை ஈ) வெறுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

ஓடுகின்றன என்பது

அ) ஆண்பால் ஆ) ஒன்றன்பால் இ) பலர்பால் ஈ) பலவின்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

ஈழத்தில் வாழ்ந்த ஆசுகவிப் புலவர்

அ) ஆறுமுகநாவலர் ஆ) கல்லடிவேலுப்பிள்ளை
இ) காளமேகம் ஈ) சின்னத்தம்பிப் புலவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

நிலவன் பொரியல் உண்டான். இதில் வந்துள்ள ஆகுபெயர்.

அ) தொழில் ஆ) சினை இ) பொருள் ஈ) குணம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

மீனுக்குக் குஞ்சு போல அணிலுக்கு

அ) குட்டி ஆ) பிள்ளை இ) கன்று ஈ) குருளை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

நெல் + கதிர் என்பதைப் புணர்த்தினால்

அ) நெற்கதிர் ஆ) நெல்கதிற் இ) நெல்க்கதிர் ஈ) நெற்க்கதிர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

பாடின்றிப் பட்டமில்லை என்ற பழமொழி குறிப்பது

அ) பாட்டு இன்றிப்பட்டமில்லை
ஆ) படிக்காவிட்டாலும் பட்டம் பெறலாம்
இ) கடின உழைப்பு இல்லாவிட்டால் பயன் பெறமுடியாது
ஈ) பாட்டுப் பாடினாலும் பட்டம் பெறலாம்

தேன்மொழி எழுதிய கவிதை செய்தித்தாளில் வெளியாகியது. இதில் எழுதிய என்பது

அ) வினையெச்சம் ஆ) வினையடி
இ) வினைமுற்று ஈ) பெயரெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

'உண்டாள்' என்பதன் விகுதி

அ) ஆள் ஆ) டாள் இ) அள் ஈ) ள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

'பைல்' கோட்டை அமைந்துள்ள இடம்

அ) ஆனையிறவு ஆ) மன்னார்
இ) ஆனைக்கோட்டை ஈ) வெற்றிலைக்கேணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

'குன்றெடுத்த பெருந்தோளான்' எனப் பாவேந்தர் குறிப்பிடுவது

அ) பண்டாரவன்னியனை ஆ) இராவணனை
இ) எல்லாளனை ஈ) சங்கிலியனை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

உறுதுணையாக நின்று உதவுதல் என்னும் கருத்தை வெளிப்படுத்தும் மரபுத் தொடர்.

அ) ஒற்றைக்காலில் நிற்றல் ஆ) ஆழம் பார்த்தல்
இ) தோள்கொடுத்தல் ஈ) இரண்டு தோணியில் கால்வைத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

தோழனுக்குத் தோழி போல உழவனுக்கு

அ) உழத்தி ஆ) உழவி இ) உழவிச்சி ஈ) உழச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புதிதாகத் தோன்றிய இலையின் பருவப் பெயர்

அ) சருகு ஆ) கொழுந்து இ) தளிர் ஈ) பழுப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

வந்தனர் என்பது

அ) ஆண்பால் ஆ) பெண்பால் இ) பலர்பால் ஈ) பலவின்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

**பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தமிழர் வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஒன்றாக நடுகல் வழிபாடு காணப்படுகிறது. ]ிகாலம் தொட்டே இவ்வழிபாடு நிலவிவருகின்றது. தாய் மண்ணுக்காக வீரச்சாவு ]டந்தவர்களுக்கு நடுகல் நாட்டுவது தமிழர் மரபு. தாய் மண்ணின் விடிவுக்காக, தாய் ]ணின் மீட்புக்காகத் தன்னுயிரை ஈகம் செய்த அவ்மாவீரனைப் புதைத்த இடத்தில் ]னைப் பற்றிய வீரச் செய்திகள் பொறிக்கப்பட்ட கல்லொன்றை நாட்டுவர். அதுவே ]ல் எனப்படும். இத்தகைய நடுகற்களையே ஆதிகால மக்கள் வழிபட்டு வந்தனர். ]வழிபாடே நடுகல் வழிபாடு என அழைக்கப்பட்டது. தமிழரது வீரம் பற்றிக் கூறும் ]ானூற்றில் நடுகல் வழிபாடு பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இறை வழிபாட்டை அக்காலத்தில் நடுகல் வழிபாடே சிறந்திருந்தது. எங்கள் தமிழீழத்திலும் ]ணுக்காக உயிர் நீத்த எம் மாவீரர்களுக்கும் நடுகல் வழிபாட்டு இடங்கள் பலவும் ]மந்திருந்தன. அவை மாவீரர் துயிலும் இல்லங்கள் என அழைக்கப்பட்டன. தமிழீழ ]ள் தங்கள் உயிரினும் மேலாக இவற்றைப் போற்றி வந்தனர். அண்மைக் ]ங்களில் அவை அழிக்கப்பட்டாலும் தமிழர் நெஞ்சங்களில் அம்மாவீரர்கள் ]ல்கின்றனர்.

ஆதிகாலத்தில் சிறந்திருந்த வழிபாடு எது?

______________________________________________

யாருக்கு நடுகல் நாட்டுவர்?

______________________________________________

______________________________________________

நடுகல் வழிபாடு பற்றிக் கூறும் நூல் எது?

______________________________________________

______________________________________________

மாவீரர் துயிலும் இல்லங்கள் எங்கே அமைந்திருந்தன?

______________________________________________

______________________________________________

தமிழர் நெஞ்சங்களில் துயில்பவர்கள் யார்?

______________________________________________

______________________________________________

## பாடநூல் வினாக்கள் ஏழில் - ஐந்திற்கு மட்டும் விடை தருக.

முல்லை மலரின் செருக்குக்குக் கவிஞர் கற்பிக்கும் கரணியம் என்ன?

அதியர்மான் பறித்த நெல்லிக்கனியின் சிறப்பு என்ன?

**குறள் :-** புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
வாய்மையால் காணப் படும்

இக் குறளின் பொருளைத் தருக.

பண்டாரவன்னியன் எதிர்த்துப் போராடிய ஐரோப்பியர்கள் யாவர்?

பாரதியார் வாழ்ந்த காலத்தில் பெண்களின் நிலை எப்படி இருந்தது?

வள்ளுவர் கூறும் நட்பின் சிறப்புகள் இரண்டினைத் தருக.

காளமேகம் என்றால் என்ன?

**தரப்பட்டுள்ள சொற்களை பொருத்தமாக வைத்துக் கவிதையை முழுமை ஆக்குவோம்.**

## இயற்கை

| | | | | |
|---|---|---|---|---|
| வானும் | அளித்த | தாய் | கவரும் | வில்லின் |

இயற்கைத் ______________________ அளித்த

ஈடிலாச் செல்வம் பலவே!

காடும் மலையும் முகிலும்

கண்ணைக் ______________________ கடலும்

நீல ______________________ - நினைவை

நீள வைக்கும் நிலவும்

வான ______________________ நிறமும்

வண்ணப் பூக்கள் பலவும்

இயற்கை ______________________ கொடைகள்

இவற்றைக் காப்போம் என்றும்.

புள்ளிகள் 10

## இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

உருபு ஏற்ற வேற்றுமைகள் எத்தனை? 4ம் வேற்றுமை உருபு இடம் பெறுமாறு சொல்லியம் ஒன்று தருக.

________________________________________

________________________________________

________________________________________

காலவாகுபெயர், குணவாகுபெயர் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

காலவாகுபெயர் :- ____________________________

குணவாகுபெயர் :- ____________________________

உண்டான் என்ற வினைமுற்றின் பகுதி, இடைநிலை, விகுதி என்பவற்றைத் தருக.

பகுதி :- ____________________________

இடைநிலை :- ____________________________

விகுதி :- ____________________________

பின்வரும் மரபுத் தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

கேட்கக்கேட்க :- ____________________________

ஊணும்உறக்கமும் :- ____________________________

பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

கூட்டுச்சொல்லியம் :- ____________________________

____________________________

கலப்புச்சொல்லியம் :- ____________________________

____________________________

**பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.**

Sommeren er kommet. Der er blomstret blomster på træerne. De er i flere farver. Man kan se fugle og kaniner på den grønne græs. Flotte hvide kaniner leger. Fuglerne flyver oppe. Det føles dejligt at se det hele.

Summer season has come. Flowers have bloomed on trees. They are in different colours. There are birds and rabbits in the green meadow. Pretty white rabbits are playing there. Birds are flying above. Seeing this scenery make us happy.

L'été est arrivé. Les arbres ont fleuris et sont toutes les couleurs. On voit des oiseaux et des lapins sont dans un pré vert. On y voit des lapins blancs magnifique qui jouent et des oiseaux volant dans le ciel. Cela nous fait plaisir de les voir.

Die Sommerzeit ist erschienen. Auf den Bäumen blühen Blumen. Es gibt sie in vielen Farben. Auf grünen Wiesen sind Vögel und Hasen zu erkennen. Schöne weiße Hasen spielen. Vögel fliegen in der Höhe. Es macht sehr glücklich dies zu beobachten.

De zomertijd is aangekomen. Er zijn bloemen gebloeid in de bomen. Die zijn in verschillende kleuren. Er zijn veel vogels en konijnen te vinden in het groene grasveld. De mooie, witte konijn zijn aan het spelen. De vogels vliegen in de lucht en dat is mooi om te zien.

É arrivata l'estate. Sugli alberi sono sbocciati i fiori. Ci sono fiori di diversi colori. Vediamo uccelli e conigli sui prati verdi. Giocano dei bei conigli bianchi. Nel cielo volano gli uccelli. Vedere tutto questo rende molto felici.

Sommertiden er begynt. Det er mye blomster på trærne. De er i mange farger. I det grønne landsskapet er det fugler og kaniner. Pene hvite kaniner leker og fuglene flyr. Dette gir glede.

Sommaren har kommit. På träden har blommorna blommats. De består av flera färger. På den gröna ängen syns fåglar och kaniner. Vackra vita kaniner leker. Fåglar flyger där uppe. Att se på det här är glädjande.

**கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

☆ தமிழுக்குத் தந்த கனி என்ற பாடலை உமது உரை நடையில் எழுதுக.

☆ இலங்கைத் தீவில் தமிழர் ஆட்சியும் மாட்சியும்

☆ கணினியின் வளர்ச்சியால் ஏற்படும் நன்மை தீமைகள்.

புள்ளிகள் 20